# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF ASSISTANT SESSION'S JUDGE , SIVAGANGAI

| | | |
|---|---|---|
| Case Number | : | S.C.No. 3/2023 |
| Deposition Of Witness for | : | PW 3 |
| Name | : | **திரு. முருகன்** |
| Father Name | : | திரு. நல்லதம்பி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20th January 2026.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

எனக்கு சொந்த ஊர் பொத்தகுடி கிராமம் ஆகும். நான் விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இறந்து போன நாகராஜன் எனது உடன்பிறந்த சகோதரன். சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக கொங்காத்தா என்பவரின் தோட்டை காணவில்லை என்றும் அதை என் அண்ணன் நாகராஜன் தான் எடுத்து விட்டார் என்று கூறினார்கள். அதற்கு கிராம பஞ்சாயத்தில் வைத்து தோட்டை திருப்பி கொங்காத்தா என்பவரிடம் கொடுத்து விட்டோம். அதன் பிறகு எனது அண்ணன் நாகராஜன் கோயம்புத்தூர் சென்று விட்டார். 11.08.2010 அன்று எனது அண்ணன் நாகராஜன் எங்கள் கிராமத்திற்கு வந்தார். எதிரிகள் எனது அண்ணனை பார்த்து திருட்டுபயலே திரும்ப ஊருக்குள்ளே வந்துடையா என்று திட்டினார்கள். எனது அண்ணன் என்னிடம் வந்து தோடை தான் திருப்பி கொடுத்துவிட்டோமே திரும்பதிரும்ப திருட்டுபயலே என்று கூறுகிறார்களே என்று கூறினார். நாங்கள் சமாதானம் பண்ணி வைத்தோம். அன்றைய தினமே 1ம் எதிரி பெரியசாமி (எ) கட்டராஜு வுடன் சேர்ந்து மது அருந்திவிட்டு வரும்போது கொங்காத்தா என்பவர் திருட்டுபயலுடன் சேர்ந்து நீயும் குடித்துவிட்டு வருகிறாயா என்று கட்டராஜுவிடம் கூறினார். அதனால் மனவருத்தப்பட்டு உயிரோடு இருப்பதைவிட இறந்துவிடலாம் என்று 3ம் எதிரி வீட்டில் தூக்கிலிட்டு இறந்துவிட்டார். கிராமத்திலிருந்து எனக்கு தகவல் வர நானும், என் அப்பா நல்லதம்பி, எங்கள் ஊரை சார்ந்த முத்தையா, வீரப்பன், அழகர்சாமி ஆகியோர்களுடன் சம்பவ இடம் சென்றோம். 3ம் எதிரி வீடு தாழ்பாள் போடப்பட்டிருந்தது. அழகர்சாமி

என்பவர் ஓட்டை பிரித்து இறங்கி தாழ்பாளை திறந்துவிட நாங்கள் உள்ளே சென்று பார்த்தோம். உத்திரத்தில் தொங்கியப்படி எனது அண்ணன் நாகராஜன் இருந்தார். நாங்கள் கயிறை அவிழ்த்து பார்த்த போது இறந்த நிலையில் இருந்தார். அதன்பிறகு காளையார் கோவில் காவல்நிலையத்தில் எனது அம்மா பஞ்சர்வணம் புகார் கொடுத்தார். நானும் உடன் சென்றேன். எனது அண்ணன் நாகராஜன் எதிரிகளுடைய பேச்சால் அவமானம் தாங்கமுடியாமல் தற்கொலை செய்து கொண்டார். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

அ.சா. ஆ.1 புகாரை நான் தான் கைப்பட எழுதினேன் என்றால் சரிதான். மேற்படி புகார் ஆனது காளையார்கோவில் காவல்நிலையத்தில் வைத்து எழுதியது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் சம்பவம் நடந்ததாக சொல்லுவதற்கு மறுநாள் மதியம் 2 மணியளவில் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த இரவு 12 மணிக்கு காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டது. எனது புகாரில் எந்த வருடம், எவ்வளவு எடை கொண்ட தோடு 2ம் எதிரி வசம் திருப்பி கொடுக்கப்பட்டது என்ற விபரம் சொல்லவில்லை என்றால் எடை குறித்து தெரியவில்லை என்பதால் சொல்லவில்லை. சம்பவம் நடைப்பெறுவதற்கு முன்பு 8 வருட காலத்தில் எதிரிகள் யாரும் எனது அண்ணனை அவதூறக பேசி அதற்காகஎனது அண்ணன் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாக எதுவும் நடக்கவில்லை என்று சொன்னால்

சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் அ ன்று எனது அண்ணனை எந்த இடத்தில் எத்தனை மணிக்கு அவதூறக எதிரிகள் பேசியதாக குறிப்பிட்டு புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. இறந்த போன நாகராஜன் இறப்பு சமயத்தில் தனியாக ஒரு வீட்டிலும், நாங்கள் தனியாக ஒரு வீட்டிலும் இருந்து வந்தோம் என்றால் சரிதான். எனது அண்ணனின் முதல் மனைவி நீதிமன்றத்தில் மூலமோ, ஊர் பஞ்சாயத்தார் மூலமோ முடிவு செய்து பிரிந்து செல்லவில்லை என்றால் ஊர் பஞ்சாயத்து மூலமாக பேசி பிரிந்து சென்றார். எனது அண்ணனின் மது அருந்தும் பழக்கத்தினாலும், அவரது தொந்தரவு காரணத்தினாலும் எனது அண்ணனின் முதல் மனைவி பிரிந்து சென்றார் பஞ்சாயத்து மூலமாக பிரிந்து செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணனின் 2வது மனைவியும் அவரை விட்டு பிரிந்து சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. எனது அண்ணனின் 2வது மனைவி பிரிந்து செல்லவில்லை என்றால் தாவா வழக்கில் அவரையும் ஒரு சாட்சியாக சேர்த்து இருப்போம் என்றும் அவ்வாறு சேர்க்காதது எனது அண்ணனுடம் 2வது மனைவி ஒன்றாக இருந்தார் என்ற சங்கதி பொய் என்றால் சரியல்ல. எனது அண்ணன் எதிரிகளுடன் முன்விரோதம் காரணமாக 3ம் எதிரி வீட்டில் சென்று தூக்கிட்டு இறந்து விட்டார் என்றும் வழக்கில் சொல்லவது போல் இல்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2026.01.20 17:13:43 +0530